EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 11

## பாரதிதாசன் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

*நா. கிருஷ்ணராஜ்*
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி. கலை
அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641 048
மின்னஞ்சல்: krishnaalaisravi@gmail.com

## *முன்னுரை*

தமிழ் இலக்கிய உலகில் பாரதிக்கு அடுத்த இடத்தில் திகழ்பவர் பாவேந்தர் பாரதிதாசன். பாரதியைக் குருவாகப் பின்பற்றினாலும் பாரதியைவிட ஒருபடி முன்சென்று பகுத்தறிவுப் பாதையை உருவாக்கியவர் பாரதிதாசன். பாரதியின் படைப்புகளில் கடவுள் குறித்த சிந்தனைகளும் பதிவுகளும் பெரும்பாலான இடங்களில் இடம் பெற்றிருப்பதை மறுக்க முடியாது. பாவேந்தரின் ஆரம்பகால ஒரு சில கவிதைகளில் மட்டுமே கடவுள் பற்றிய கருத்துகள் இடம் பெற்றிருந்தன. காலத்தின் மாற்றத்தால் கடவுள் சிந்தனைகள் என்பதை பெயரளவில் கூட நினைக்காமல் பகுத்தறிவுச் சிந்தனைகளை கருவாகக் கொண்டு படைப்புகளைப் படைத்தவர் பாரதிதாசன். சமூகம் மேம்பாடு அடைவதற்கும் மக்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுவதன் பொருட்டும் படைப்புகள் உருவாக்கப்படுகின்றன பாரதியைத் தொடர்ந்து பாரதியின் வழியே படைப்புகளைப் படைத்து வழங்கியவர் பாரதிதாசன். பக்தி என்பதைப் புறக்கணித்துவிட்டு பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கொள்கையாகக் கொண்டு முன்னெடுத்துச் சென்ற பெருமை பாவேந்தருக்கு உரியதாகும். அந்த வகையில்

பாரதிதாசனின் கவிதைகளில் காணலாகும் பல்வேறு சமுதாயச் சிந்தனைகளைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பொதுவுடைமை

சமுதாயத்தில், மனித இனத்தில் காணலாகும் வேறுபாடு புதியது அன்று. தொன்றுதொட்டு இருந்து வருவதே. வேதகாலத்தில் இருந்து வந்த ருணாசிரம முறையில் மனித இனப் பாகுபாடு நான்கு நிலையில் இருந்தது மனித இன வேறுபாடுகள் காலங்கள் செல்லச் செல்ல செய்கின்ற தொழிலின் அடிப்படையில் சாதி என பெயர் பெற்றது சாதி என்று அழைக்கப்படும் அவற்றின் எண்ணிக்கையும் பல மடங்கு ஆயிற்று.

"பிறப்புக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" 1

என்கிறார் வள்ளுவர்.

உலகில் உள்ள எல்லா மனிதர்களும பிறப்பால் ஒத்த தன்மை உடையவர்களே. அவரவர்கள் செய்கின்ற தொழிலின் அடிப்படையில் தான் மனித இனத்தில் வேறுபாடுகள் தோன்றியது என்கிறார் வள்ளுவர். மக்களின் சாதிகளின் எண்ணிக்கை பெருகப்பெருக அடக்குமுறையும் மேலோங்கத் தொடங்கி, நாளடைவில் இந்த ஆதிக்கச் சக்திகள் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மீது மட்டுமல்ல அவர்களுக்கான உரிமைகளையும் பறிக்கத் தொடங்கியது. இத்தகைய சூழலில்தான் பொதுவுடமை என்ற விழிப்புணர்வு மக்களுக்கு தேவையானதாக இருந்தது. வெள்ளையரிடம் நாம் அடிமைகளாக இருந்தது ஒருபுறமிருக்க, நமக்கு நாமே நம் மக்களை அடிமைகளாக்கி இருந்தோம். விடுதலை பெற்ற பின்பும், அதிகாரம், பணம், சாதி போன்ற பல்வேறு காரணங்களால் சமுதாயத்தில் தனியுடைமையாளர்களின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. இருபதாம் நூற்றாண்டுகளில் இந்தக் கொடுமைகளை வேரோடு களைய முற்பட்டவர்களுள் பாரதிக்கும் பாரதிதாசனுக்கு சிறப்பிடம் உண்டு தனியுடமைக் கொடுமைகளையும் பொதுவுடமை மலர்வதற்கான வழிகளையும் பாரதி தம் படைப்புகளில் ஆங்காங்கே சுட்டிக்காட்டினாலும் பாரதிதாசன் மிக வன்மையாகச் சாடுகிறார். உலகில் உள்ள எல்லோருக்கும் உரிமையான பொருள்களையும் உரிமைகளையும் மக்கள் அனைவரும் பெற வேண்டும் இவற்றை பெறுவதில் எந்த வித வேதங்களும் இருக்கக்கூடாது என்பதே பொதுவுடமை சித்தாந்தம். அறிவியலும் தொழில்நுட்பமும் இட ஒதுக்கீடும் வளர்ந்த இன்றைய காலகட்டத்திலும் கூட நம் சமூகத்தில்

ஆங்காங்கே பொதுவுடமைக்கான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருப்பதை மறுக்க முடியாது.

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

பொது உடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனதென்னமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
ஒருபொருள்தனி எனும் மனிதரைச் சரிப்போம்

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்"2

என்கிறார் பாவேந்தர்.

"இனி ஒரு விதி செய்வோம் - அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக்குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்"3

என்ற பாரதியின் வரிகள் இங்கு சுட்டத்தக்கது. சோர்வின்றி நாள்தோறும் உழைத்தாலும் ஏழைகளுக்கு மூன்று வேளை உணவு மட்டுமாவது கிடைத்திருக்க வேண்டும். அது நிகழாமலேயே இருக்கிறது. இதற்கான காரணம் என்னவென்று பார்த்தால் தனியுடமைக் கொடுமை என்பது புலப்படுகிறது. காலம்தோறும் உழைப்பிற்கும் உழைப்பாளர்களுக்கும் உரிய மரியாதையும் உரிமைகளும் கிடைப்பதே இல்லை. இவையெல்லாம் பெறுவதற்கு முன் தொழிலாளர்களின் உழைப்பை மேன்மையை, அவர்களின் உழைப்பின் சிறப்பை முதலில் இந்த உலகத்திற்கு உணர்த்த வேண்டும் என்பதை அறிந்த பாவேந்தர் தொழிலாளர்களின் உழைப்பைப் பின்வருமாறு சிறப்பிக்கிறார்.

"ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ? .......
தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?" 4

என்கிறார். அதோடு மட்டுமின்றி ஒரு வேளை கூட வயிறு நிறைய உணவு உண்ண முடியாத தொழிலாளர்களின் அவல நிலையை,

"பாதிக்கும் பசி என்றுரைத்தால், செய்த
பாவத்தைக் காரணம் காட்டுவார்" 5

"நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் ......... " 6

என்ற வரிகள், எவ்வளவு தான் உழைத்தாலும் அதற்கேற்ற பயன் தொழிலாளர்களுக்குக் கிடைக்காததை உணர்த்துகின்றன. இருப்பினும் தொழிலாளர்கள் ஒருபோதும் தம் உழைப்பைப் புறக்கணிப்பதும் இல்லை குறைப்பதும் இல்லை. எல்லாம் முடிந்த பின் எஞ்சி இருப்பது என்ன என்று பார்த்தால் தொழிலாளர்களின் கையும் காலும் தான்.

## பெண்ணுரிமை

ஆண்களுக்கு இணையாக, பெண்கள் கல்வி கற்பதும் கற்ற கல்விக்கு ஏற்ப பணிக்குச் செல்வதும் இன்றைய சூழலில் இயல்பான ஒன்றே. பாரதி, பாவேந்தர் காலம் வரை சமூகத்தில் பெண்களின் நிலை கேள்விக்குறியாகவே இருந்தது. வீட்டுக்குள்ளேயே அடைப்பட்டு இருந்தனர். கல்வி மறுப்பு, கைம்மைத்துயர் போன்ற இன்னல்களுக்கு ஆட்பட்டு இருந்தனர். பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால் பெண்ணடிமைத்தனம் சமூகத்தில் மேலோங்கியிருந்தது எனலாம். இக்கொடுமைகளைப் பற்றி அனைவரும் அறிவோம். பெண்ணடிமைத்தனம் எனும் மடமையைப் போக்கி, கல்வியறிவு பெண்களுக்கும் தேவை என்று பகுத்தறிவு நோக்கில் புதிய பாதையை உருவாக்கிய பெருமை பாவேந்தருக்கு உரித்தானது. ஆண் கல்வி கற்றால் அது தனி ஒரு மனிதரான அவருக்கு மட்டுமே பயன்படும். பெண் கல்வி கற்றால் அதன் பயன் அவர் சார்ந்த குடும்பத்திற்கும் பயனளிக்கும். சமூகத்தில் நிலவும்

பேதங்களைப் போக்கி, மனிதனை உயர்த்தும் வல்லமை கல்விக்கு மட்டுமே உண்டு என்பதை, உணர்ந்ததான் ஆண் - பெண் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் கல்வி பெற வேண்டும் என்ற அறிவுறுத்தல் இன்றளவும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது

“வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே”7

என்கிற புறநானூற்றுப் பாடல் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

பெண் கல்வி குறித்து பேசுகின்ற பாவேந்தர்,

"பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணு தற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணு தற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணு தற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணு தற்கே!”8

என்று, பெண்கள் கல்வி கற்பதால் இந்தச் சமுதாயம் அடையும் பயன்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். பெண்கள் கல்வியறிவு பெறாவிட்டால் நிகழும் தீமைகளையும் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

"கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந்நி லத்தில்
புல் விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி; அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவில வோநான்"9

வாழ்க்கைத் துணையை இழந்த ஆண் மறுமணம் செய்வதற்கு சமுதாயத்தில் எந்த தடையுமில்லை. கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் என்பது கனவிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத செயல். மறுமணம் என்பது பெண்களுக்கும் வேண்டும் என்று போராடியவர் பாரதிதாசன். கணவனை இழந்த பெண்கள் உலகில் இயல்பாக வாழ்வது என்பது கடினமே. ஏனென்றால் அவர்கள் பல்வேறு கொடுமைகளுடன் வாழ்வதைவிட உயிரை விட்டு விடுவதே மேலானது என்ற நிலை சமூகத்தில் இருந்தது. கைம்மைத் துயருடன் வாழ முடியாது என்பதைக் கருத்தில் கொண்டுதான் மறுமணம் செய்யும் உரிமைக்குக் குரல் கொடுத்ததை மறுக்க முடியாது.

"மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
அணுவளவும் அடையாமல் சாகச் செய்வீர்
பெண்டிழந்த குமரன் மனம்
பெண்டு கொள்ளச் செய்யும் எத்தனம்"10

என்கின்ற பாவேந்தரின் வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இல்லறம்

சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழ்வது குடும்ப அமைப்பே. மூடநம்பிக்கைகளின் முக்காட்டினை அவிழ்த்துப் பகுத்தறிவு முழக்கம் செய்த பாவேந்தரும் இல்லறத்தின் இன்றியமையாமையைப் பல இடங்களில் எடுத்துரைக்கிறார். சமூகத்தில் புரையோடிக்கிடந்த பெண்ணடிமைத்தனத்தைப் போக்கி, பெண் உரிமைக்காகப் போராடினாலும் இல்லறம் நன் முறையில் இயங்க வேண்டும் என்பது பாவேந்தரின் கருத்தாகும். இல்லறத்தில் கணவன், குழந்தைகள், மாமன், மாமி, வீட்டிற்கு வரும் விருந்தினர்கள், உறவினர்கள் அனைவரின் குறிப்பறிந்து நடந்து கொள்ள வேண்டும். உறவுகளோடு சேர்ந்து மகிழ்ச்சியோடு வாழும் போதுதான் இல்லறம் மென்மேலும் சிறக்கும். இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலும் தனிக் குடும்பங்களாகவே இருக்கின்றன. தனிக் குடும்பங்களில் மகிழ்ச்சி என்பதும் ஒரு கேள்விக்குறியே. குழந்தைகளை வழி நடத்த,அவர்களுக்கு அறிவுரை கூற நல்வழிப்படுத்த பெரியோர்கள் இல்லை என்பது நாம் இன்றைய இல்லற வாழ்விற்கு பெரும் குறையாகும்.

"வீடு மலர்க்காடு; விருந்தினரும் வீட்டாரும்
பாடுகளை வண்டுகள்தாம்; பார்க்கத் தரும்காட்சி"11

என்ற குடும்ப விளக்கின் பாடல் வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கது. அவரவர்களுக்கு விருப்பமான மற்றும் உடல் நலத்தோடு தொடர்புடைய உணவுகளை சமைத்து அளிக்க வேண்டும். காலை எழுந்தது முதல் இரவு உறங்கும் வரை பல்வேறு பணிகளையும் இன்முகத்தோடு நன்முறையில் செய்வது இல்லறத் தலைவியின் உயரிய கடமையாகும். இது பெண்ணடிமைத்தனமோ, அடக்குமுறையோ அல்ல. குடும்ப அமைப்பின் ஆணிவேரே பெண்கள்தான். பல்வேறு செல்வங்களைப் பெற்றிருந்தாலும் இல்லாள் இல்லாத வீடு பயனற்றதாகும்.

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ், பாழே
மடக்கொடி யில்லா மனை" 12
என்று இல்லாளின் மேன்மையை அவ்வையார் கூறியுள்ளார்.

இன்றைய காலத்தில் வயது வேறுபாடு இன்றி எல்லோருக்கும் உணவு உண்பதில் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் நீண்ட பட்டியலாகவே மருத்துவர்கள் வழங்கி விடுகிறார்கள். இது போன்ற இன்னல்கள் வராமல் உணவு சமைப்பது இல்லாளின் கடமை என்பதைப் பாவேந்தர் பின்வருமாறு அறிவுறுத்துகிறார்.

"கீரை தயிர் இரண்டும்
    கேடு செய்யும் இரவில்
மோரைப் பெருக்கிடு
    முப்போதும் நேரிழையே"13

என்று கூறுவதோடு, இல்லறத்தைப் பின்பற்றுபவரகள் தன் வீடு தன் பெண்டு தன் பிள்ளை என்று தன்னலத்தோடு இருக்காமல், நாம் வாழ்கின்ற இந்தச் சமூகத்திற்கு, நம்முடைய நாட்டிற்கு இன்று நாம் என்ன செய்தோம் என்ற பொது நலத்தையும் கருத்தில் கொண்டு கடமையாற்ற வேண்டும்.

"நாடலாம் என்னாமல்
மாநிலத்தின் நன்மைக்குப்
பாடுபட வேண்டும்
நாடு
ஒரு தீமை கண்டால்
ஒதுங்கி நிற்றல் தீமை"14

## முடிவுரை

சமூகத்தில் புரையோடிக்கிடந்த மூடநம்பிக்கைகளைப் போக்கிப் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் புகுத்த முயன்று வெற்றி பெற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். பாரதிதாசன் எனும் ஒரு மகா கவிஞன் மட்டும் இல்லை என்றால் தமிழ்ச் சமூகத்திலும் இலக்கியங்களிலும் பகுத்தறிவு எனும் சொல்லாட்சி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும். தமக்குப் பின் பாரதிதாசன் கவிப் பரம்பரை எனும் மாபெரும் கவி பரம்பரையை உருவாக்கியவர் பாவேந்தர். செய்கின்ற தொழில், பொருளாதாரம், சாதி, அதிகாரம் போன்ற பல்வேறு காரணங்களால் சமூகத்தில் நிலவிவந்த வேறுபாடுகளைத் தம் படைப்புகள் வழி சாடியுள்ளார். இப் பேதங்களே தனியுடமை மேலோங்கவும் பொதுவுடமை பொலிவு இழக்கவும் காரணமாக இருந்தன. காட்டை அழித்துக் கழனியாக்கிய தொழிலாளர்கள், அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், தொழிலாளர்களின் மேன்மை இவற்றையெல்லாம் உள்ளடக்கிய பொதுவுடைமை சிந்தனைகளை பாவேந்தரின் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன. அடிமைத் தளையில் இருந்து மீளவும் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெறவும் புரட்சி என்ற சிந்தனை தோன்றினால்தான் தொழிலாளர்களுடைய வாழ்வு மேம்படும் மறுமணம் கல்வி ஆகிய உரிமைகள் மறுக்கப்பட்டு, பெண்ணடிமைத்தனம் மேலோங்கியிருந்தைப் பாடுவதோடு பெண்கள் உரிமை பெற வழிவகை செய்த பெருமை பாவேந்தரையே சாரும். பெண்கள் உரிமை பெற்றாலும் பெண்கள் இல்லறத்தைத் தன் கண்களாகக் கருதி செயல்படவேண்டும். குடும்ப உறுப்பினர்களின் குறிப்பறிந்து நடத்தல் உடல் நலனைக் கருத்தில் கொண்டு உணவு சமைத்தல் முதலான இல்லறப் பணிகளைச் செவ்வனே செய்வதுதான் இல்லறத்தின் மேன்மையாகும். பொதுவுடைமை, பெண்ணுரிமை, இல்லறம் போன்ற பல்வேறு சமுதாயச் சிந்தனைகளைப் பாரதிதாசனின் கவிதைகள் புலப்படுத்துவதைப் பற்றி இக்கட்டுரை வழி அறிந்தோம்.

## அடிக்குறிப்பு

1. திருக்குறள், நாமக்கல் கவிஞர்(உ.ஆ),குறள். 972. , 24 ஆம் பதிப்பு 2014 , சாரதா பதிப்பகம், சென்னை.

2. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதான், ப.க். 112 - 113., ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006, ஶ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை.

3. பாரதியார், பாரதியார் கவிதைகள்,ப.41., மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 1981,பூம்புகார் பிரசுரம் பிரஸ், 63 பிராட்வே, சென்னை.

4. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதான், ப. 112 ., ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006, ஶ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை.

5. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதான், ப.113., ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006, ஶ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை.

6. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதான், ப.32., ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006, ஶ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை.

7. புறநானூறு, ஔவை துரைசாமிப்பிள்ளை(உ.ஆ), பா.எண்.183, முதற்பதிப்பு 2015, சாரதா பதிப்பகம், சென்னை.

8. குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், ப.48., பத்தாம் பதிப்பு, சூலை 2004, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

9. குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், பக்.,48 – 49., பத்தாம் பதிப்பு, சூலை 2004, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

10. பாரதிதாசன் கவிதைகள், பாவேந்தர் பாரதிதான், ப.92., ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006, ஶ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகர், சென்னை.

11. குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், ப. 55., பத்தாம் பதிப்பு, சூலை 2004, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

12. நீதி நூல்கள், துரை–தண்டபாணி(உ.ஆ), ப.166., உமா பதிப்பகம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை.

13. குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், ப. 28., பத்தாம் பதிப்பு, சூலை 2004, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

14.குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், ப. 45., பத்தாம் பதிப்பு, சூலை 2004, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.